செ.வெ.எண்.80 நாள்:29.04.2017

பத்திரிக்கை செய்தி ___ திருநெல்வேலி மாவட்டம்

# திருநெல்வேலி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.6.05 கோடி மதிப்பிலான பால் மற்றும் வெண்ணை குளிர்வூட்டும் அறைகள், இயந்திர தளவாடங்கள் மற்றும் கட்டிடங்களை மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினார் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சர் திரு.கே.டி.ராஜேந்திரபாலாஜி அவர்கள் திறந்து வைத்தார்.

திருநெல்வேலி ரெட்டியார்பட்டி சாலையில் உள்ள மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.6.05 கோடி மதிப்பிலான பால், வெண்ணை குளிர்வூட்டும் அறைகள், இயந்திர தளவாடங்கள் மற்றும் கட்டிடங்கள் திறப்பு விழா மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் தலைமையில் இன்று (29.04.2017) நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சர் திரு.கே.டி.ராஜேந்திரபாலாஜி அவர்கள் கலந்து கொண்டு ரூ.6.05 கோடி மதிப்பிலான பால் மற்றும் வெண்ணை குளிர்வூட்டும் அறைகள், இயந்திர தளவாடங்கள் மற்றும் கட்டிடஙகள் திறந்து வைத்தார். மேலும் 16 லட்சம் மதிப்பிலான ஆவின் ஐஸ் கீரிம் எடுத்து செல்லும் குளிர்வூட்டு வாகனத்தை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இவ்விழாவில் மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சர் பேசியதாவது:-

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பால் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் பல திட்டங்களை தீட்டி செயல்படுத்தியுள்ளார்கள. இதனால் தமிழகத்தில் பால் உற்பத்தி அதிகரித்துள்ளது. மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்ன அனைத்து திட்டங்களையும் செயல்படுத்தியவர். புரட்சித் தலைவர் எம்.ஜீ.ஆர் அவர்கள் ஏழைக் குழந்தைகளின் பசியை போக்கிட சத்துணவு தந்ததைப் போல் மாண்புமிகு அம்மா அவர்கள் இலவச அரிசி வழங்கும் திட்டம், அம்மா உணவகம், உள்ளிட்ட பல திட்டங்கள் கொண்டு வந்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்த அனைத்து திட்டங்களையும் செயல்படுத்தியுள்ளார்கள். தொடர்ந்து மாண்புமிகு அம்மா அவர்களின் அரசின் மாண்புமிகு முதலமைச்சர் திரு.எடப்பாடி பழனிச்சாமி அவர்களும் ஏழை எளிய மக்களுக்காக தொடர்ந்து பல திட்டங்களை செய்து வருகிறார். 70 நாட்களில் 1500க்கும் மேற்பட்ட கோப்புகளில் கையெழுத்திட்டுள்ளார்கள். அனைத்து தரப்பு மக்களின் ஆதரவை பெற்றுள்ளார்கள்.

திருநெல்வேலி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சித் திட்டத்தில் மத்திய பால் பண்ணை சுற்றுச் சுவர் ரூ.98 லட்சம் மதிப்பிலும், நவீன தொழில் நுட்ப பாலகம் ரூ.70 லட்சத்திலும், வெண்ணெய்

குளிர்விக்கும் கிடங்கு ரூ.38 லட்சத்திலும், பால் பாக்கெட்டுகள் குளிர்விக்கும் அறை ரூ.24 லட்சத்திலும் என மொத்தம் 2.75 கோடி மதிப்பிலான கட்டுமான பணிகளும், முடிக்கப்பட்டுள்ளது. இயந்திர தளவாடங்களை சுத்தம் செய்திடும் இயந்திரம் ரூ.50 லட்சத்திலும், கொதிகலன் ரூ.41 லட்சத்திலும், வெண்ணெய் குளிர்விக்கும் கிடங்கு இயந்திர தளவாடங்கள் ரூ.85 லட்சத்திலும், மேலும் பல்வேறு இயந்திர தளவாடங்கள் ரூ.3.30 கோடி மதிப்பீட்டில் வாங்கப்பட்டுள்ளது. ___ 2016 ___ 2017 ம் ஆண்டிற்கு ரூ.3.26 கோடி பல்வேறு பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழக அரசும் பல்வளத்துறைக்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்து வருகிறது. திருநெல்வேலியில் புதிதாக 200 மிலி மற்றும் 500 மிலி தயிர் பாக்கெட்கள் தயார் செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. 1000 கிலோ ஆவின் ஐஸ்கீரிம் எடுத்துச் செல்லும் வகையில் ரூ.14 லட்சம் செலவில் புதிய குளிரூட்டப்பட்ட வாகனம் வழங்கப்பட்டுள்ளது.

ஆவின் பால் தான் தரமான பாலாகும் தாய்பாலுக்கு இணையான பசும் பாலாகும், இது மிகவும் சுத்தமான, உடலுக்கு எவ்வித கெடுதலும் இல்லாத பாலாகும். ஆவின் பொருட்கள் மிகவும் தரமானதாக தயார் செய்யப்படுகிறது. பொதுமக்களின் மிகுந்த ஆதரவை ஆவின் நிறுவனம் பெற்றுள்ளது. பணியாளர்கள் பொதுமக்களுக்கு தரம் குறித்த விழிப்புணர்வை அதிகரிக்க செய்ய வேண்டும். தமிழக அரசு உங்களுக்கு தேவையான உதவிகளை செய்யும் என பேசினார்.

இக்கூட்டத்தில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது:-

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏழைகளின் வாழ்க்கை தரத்தினை உயர்த்திட கறவை மாடு வழங்கும் திட்டத்தை செயல்படுத்தி ஏழைகளின் வாழ்க்கை தரத்தினை உயர்தியதுடன் வெண்மை புரச்சியையும் ஏற்படுத்தியுள்ளார்கள். 2016 ம் ஆண்டு முதல் தற்போது வரை முன் ஏப்போதும் இல்லாத வகையில் பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளது.

அதிநவின பாலகம், புதிய பல சிரிய பால் குளிரூட்டும் நிலையங்கள், என பால்வளத்துறைக்கு அம்மா அவர்கள் அள்ளித்தந்துள்ளார்கள். பால்வளத்துறையை திறம்பட நடத்தி இந்திய மநிலங்கள் வியந்து பார்கும் அளவில் வியக்க தக்க திட்டங்களையும் செயல்படுகளையும் செய்து தமிழக அரசு பால்வளத் துறையை சாதனையைடையச் செய்துள்ளது. எனப் பேசினார்.

இக்கூட்டத்தில் பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை இயக்குநர் திரு.சி.காமராஜ்,இ.ஆ.ப., அவர்கள், திருநெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கே.ஆர்.பி.பிரபாகரன், திருமதி.விஜிலா சத்தியானந்த், திரு.முத்துக்கருப்பன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.ஆர்.முருகையா பாண்டியன், திரு.ஐ.எஸ்.இன்பத்துரை, தென்னக இரயில்வே ஆலோசனை குழு உறுப்பினர் திரு.பாப்புலர் முத்தையா, ஆவின் தலைவர் திரு.ரமேஷ், ஆவின் பொது மேலாளர் திரு.ராமநாதன், திருநெல்வேலி, தூத்துக்குடி நெசவாளர் சங்க தலைவர் திரு.ஆறுமுகம், முன்னால் சட்டமன்ற உறுப்பினர் திரு.சேர்ம

பாண்டி, முக்கிய பிரமுகர்கள் திரு.பரணிசங்கரலிங்கம், தட்சை கணேச ராஜா, ஆவின் அண்ணா தொழிற் சங்க மாநில துணைத் தலைவர் திரு.பத்ரகாளி, திருநெல்வேலி ஆவின் அண்ணா தொழிற்சங்க செயலாளர் திரு.அண்ணாச்சாமி மற்றும் ஆவின் துணை மேலாளர்கள், தொழிலாளர்கள், பால் உற்பத்தியாளர்கள். கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.